A

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2023

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 50

பகுதி - அ

I. பலவுள் தெரிக. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 7 x 1 = 7

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் ________.
   அ) எந் + தமிழ் + நா  ஆ) எந்த + தமிழ் + நா
   இ) எம் + தமிழ் + நா  ஈ) எந்தம் + தமிழ் + நா
2. காசி காண்டம் என்பது ________.
   அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல்
   ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
   இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்
   ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்
3. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது ________.
   அ) வேற்றுமை உருபு  ஆ) எழுவாய்
   இ) உவம உருபு  ஈ) உரிச்சொல்
4. பாடுஇமிழ் பனிக்கடல் பருகி என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
   அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்  ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
   இ) கடல் நீர் ஒலித்தல்  ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
5. வேர்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை
   அ) குலை வகை  ஆ) மணி வகை  இ) கொழுந்து வகை  ஈ) இலை வகை
6. தொகைநிலைத் தொடர்கள் ________ வகைப்படும்.
   அ) 6  ஆ) 8  இ) 9  ஈ) 12
7. அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும் - என்ற நூல் ________.
   அ) புறநானூறு  ஆ) நற்றிணை  இ) சிலப்பதிகாரம்  ஈ) குறுந்தொகை

பகுதி - ஆ

II. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 12 கட்டாய வினா) 4 x 2 = 8

8. விடைக்கேற்ற வினா அமைக்க :
   அ) மொழி ஞாயிறு என்றழைக்கப்படுபவர் தேவநேயப் பாவணர்.
   ஆ) இயற்கைச் சூழல் நமக்குள் இனிய உணர்வுகளைத் தூண்டுகிறது.
9. வசன கவிதை - குறிப்பு வரைக.
10. 'வேங்கை' என்பதை தொடர் மொழியாகவும், பொது மொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.
11. "இறடிப் பொம்மல் பெறுகுவிர்" - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.
12. "முயற்சி" எனத் தொடங்கும் திருக்குறளை அடி மாறாமல் எழுதுக.

பகுதி - இ

III. எவையேனும் 4 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 17 கட்டாய வினா) 4 x 3 = 12

13. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுற மொழியும் பாங்கினை விளக்குக.
14. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' - இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.
15. சோலைக்காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.
16. தொழிற்பெயர்க்கும் வினையாலணையும் பெயர்க்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



17. அன்னை மொழியே - எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

(அல்லது)

'சிறுதாம்பு' எனத் தொடங்கும் முல்லைப்பாட்டு பாடலை எழுதுக.

பகுதி - ஈ

IV. எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளி. 3 x 5 = 15

18. முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

19. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக.

20. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



21. அ) மொழிபெயர்க்க :

The golden sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds start twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers' fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything pleasant.

(அல்லது)

ஆ) சான்றோர் வளர்த்த தமிழ் குறித்து கட்டுரை எழுதுக.

பகுதி - உ 1 x 8 = 8

22. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

(அல்லது)

ஆ) அன்னமய்யா என்னும் பெயருக்கும், அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

******

www.Padasalai.Net

Kindly send me your study materials to padasalai.net@gmail.com